ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1828/3 - 2013 සැප්තැම්බර් මස 16 වැනි සඳුදා - 2013.09.16

1828/3 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம் )**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: பிஏஎஸ்சீஓ/எல்/3/1

2012 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதிய 1758/24 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்ட துண்டு இல. 1 இன் அறிவித்தல் இல. 06-126, கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத் தருகிறேன்.

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: மீபிட்டியவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்:எல். பி. மஞ்சுள பெரேரா, மீபிட்டியவத்த, நாவலபிட்டிய; விஸ்தீரணம்: 0.0597 ஹெக்டயார்.

மதுபாணி பியசேன,
பிரதேச செயலாளர்,
பஸ்பாகே கோரளை.
நாவலபிட்டி.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பஸ்பாகே கோரளை,
நாவலபிட்டி,
2013, யூன்.25.

9 - 1144

**காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம் )**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: 3/1/2/28.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தின், மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவில் வெதா கோரளை சிறுபிரிவில், இல. 648 தெல்பத்தன கிராம சேவகர் பிரிவில், தெல்பத்தன கிராமத்தில் அமைந்துள்ள குருணாகல் நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. 1105 இன் தாள் 10, வலய இல. 10 இன் துண்டு இல. 187 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 0.0003 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித்துண்டின் பெயர் மற்றும் பிரமாணங்களின் விபரம் கீழ்வருமாறு:

**எல்லைகள் கீழ்வருமாறு:**

வடக்கு : துண்டு இல. 1 மற்றும் துண்டு இல. 182; கிழக்கு: துண்டு இல. 182 மற்றும் வீதி; தெற்கு: வீதி மற்றும் துண்டு இல. 01; மேற்கு: துண்டு இல. 01.

1. துண்டு இல. 01

காணியின் பெயர் : ஹீன்கந்த கும்புர; விபரம்: வீதி;உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எம். எச். எம். ஹலீல் மற்றும் எம். எச். எம். நஜார், இல. 97, கண்டி வீதி, பரகஹதெனிய, வெதா;விஸ்தீரணம் : 0.0003 ஹெக்டயார்.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு ........ மாதம் ........ ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாவத்தகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறிந்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு .................. மாதம் ...... ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகின் றனர்.

ஈ. எம். எம். எஸ். ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
மாவத்தகம.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மாவத்தகம,
2013, யூலை 08.

9 - 1145

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம் )

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: 3/1/2/29.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் இல.: எல்டி/5/2006/ எச்டபிள்யு/62.

2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதிய 1596/16 ஆம் இலக்கம் கொண்ட பகுதி III காணிகள் 7 ஆம் பிரிவின் கீழ் துண்டு இல. 182 இன் ஆரம்ப வரைபட இல. 1106, தாள் 13, வலய இல. 12 மற்றும் அறிவித்தல் இல. 04-577, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகிறேன்.

நீக்கப்படவேண்டிய திகதி: 2009.05.27

நீக்கப்படுவறற்கு பதிலாக சேர்க்கப்பட வேண்டிய திகதி: 2013.10.30

ஈ. எம். எம். எஸ். ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
மாவத்தகம.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மாவத்தகம,
2013, யூலை 07.

09 - 1146

### காணி சுவீகரித்தல் சட்டம் (460 ஆம் அத்தியாயம் )

7 வது பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இலக்கம்: கபிசெ/சுவீ/03/01/70.

பொதுமக்கள் பணி நிமித்தம் தேவைப்டும் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள காணியை சுவீகரித்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியுள்ளமையினை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்த) சட்டத்தின் திருத்தத்தின்படி காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7 வது பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**காணி சுவீகரித்தலுக்கான காரணம் :-**

களுகங்கைநீர்வழங்கல் திட்டத்தின் II வது கட்டத்தின் கீழ் நீர்க் கோபுரமொன்றினை நிரிமாணிப்பதற்காக.

**பெற்றுக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :-**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், 565 ஏ படகெத்தர தெற்கு கிராம சேவகர் பிரிவில் மடபாத கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப நில வரைபடத்தின் இலக்கம் கோ. 9331 இல். குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 01.

| | |
|---|---|
| காணியின் பெயர் | : சாரபூமி பெதெச (பிரதேசம்) 43 ஏ மதிப்பீட்டு வரி இலக்கத்தையுடைய காணி |
| விபரம் | : வீட்டுத் தோட்டம், நிலையான நீர் தாங்கி ஒன்றுள்ளது. |
| உரிமை | : அரசாங்கம் |
| முதல் உரிமம் கோருபவர் | : கஸ்பேவ பிரதேச சபை |
| விஸ்தீரணம் | : 0.0660 ஹெக்டயார் |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013.10.28 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கஸ்பேவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக தோன்றல் வேண்டும்.

மேலும், 2013.10.21 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை/ எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகை யையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் இரண்டு பிரதிகளையுடைய எழுத்து மூல ஆவணத் தினூடாக எனக்கு அறிவிக்க வேண்டும்.

எல். ஏ. களுகபுஆரச்சி,
பிரதேச செயலாளர்,
மற்றும் காணி சுவீகரித்தல்
அதிகாரி,
கஸ்பேவ .

கஸ்பேவ பிரதேச செயலகம்.
2013 செத்தெம்பர் 11.

9 - 1251

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.